டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 27.05.2026 புதன்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 280 - Madurai | Online Edition

# மே 30 வரை உள் தமிழக பகுதிகளில் வெப்பநிலை அதிகரிக்க வாய்ப்பு!

சென்னை, மே 26

உள் தமிழக பகுதிகளில் ஒரு சில இடங்களில் மே 30-ம் தேதி வரை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை உயரக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இது குறித்து, சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் சுமார் 3.1 கி.மீ., முதல் 7.6 கி.மீ., உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதுதவிர, மத்திய மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, மே 27-ம் தேதி முதல் மே 31-ம் தேதி வரை, தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று (மே27) வானம் ஓரளவு மேகமூட்டமாக காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 40 முதல் 41 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும்.

மீனவர்களைப் பொறுத்தமட்டில், தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார்வளைகுடா, குமரிக்கடல் பகுதி, தெற்கு வங்கக்கடலின் அநேக பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகள், அந்தமான் கடல் பகுதி, தெற்கு வங்கக் கடலின் அநேக பகுதிகளில் மே 30-ம் தேதி வரை பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும். எனவே, இப்பகுதிகளுக்கு மீனவர்கள் மேற்படி தேதி வரை செல்ல வேண்டாம் என்று அறுவுறுத்தப்பட்டுள்ளது.

# வரும் 31.05.26 தேதிக்குள்

# விவசாய அடையாள எண் பெற்றுக் கொள்ளலாம்

புதுக்கோட்டை, மே 26

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பொறுப்பு சவீதா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், விவசாயிகள் அனைவரும் தங்கள் பயனடையும் வகையில் மத்திய மாநில அரசால் வழங்கப்படும் அனைத்து சலுகைகள் பெறவும் தங்கள் விவசாய நிலத்திற்கு பயன்படுத்தக்கூடிய உரங்கள் மற்றும் வேளாண் கருவிகள் அனைத்தும் அரசின் மானியங்கள் பெறுவதற்கும் விவசாயிகள் தங்கள் நிலவுடைமை களை சரி பார்த்து விவசாய அடையாள எண் பெற்றுக் கொள்ளலாம்.

நேரடி சிட்டா உள்ள விவசாயிகள் அனைவரும் வேளாண் மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, வேளாண் பொறியியல் துறை அலுவலர்கள் உங்கள் இல்லம் தேடி வருகிறார்கள். இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்தி தங்கள் பெயரில் உள்ள கணினி சிட்டா, ஆதார் கார்டு மற்றும் ஆதாருடன் இணைக்கப்பட்ட மொபைல் எண்ணைக் கொடுத்து விவசாய அடையாள எண் பெற்றுக் கொள்ளலாம்.

அடையாள எண் பெறுவதால் மத்திய, மாநில அரசின் நேரடி மானியங்கள் பெறலாம். பிரதம மந்திரியின் கௌரவ நிதி திட்டத்தில் வருடாந்தோறும் ரூபாய் 6000/- பண பெறும் விவசாயிகள் கண்டிப்பாக விவசாய அடையாள எண் தேவை. எனவே இந்த வாய்ப்பை பயன்படுத்தி வரும் 31.05.26 தேதிக்குள் பதிவு செய்து பயனடையலாம் என கேட்டுக் கொண்டுள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# வேளாண் பொருட்களுக்கான ஏற்றுமதி ஆவணங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்த பயிற்சி

கோயம்புத்தூர், மே 26

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தில் இரண்டு நாள் வேளாண் பொருட்களுக்கான ஏற்றுமதி ஆவணங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்து பயிற்சி வழங்கப்படுகிறது.

இப்பயிற்சியில் உழவர்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், மகளிர், இறுதி ஆண்டு பட்டதாரி மாணவ, மாணவியர்கள், இதர பட்டதாரிகள், இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் பங்கு பெறலாம். இப்பயிற்சி வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தில் 18.06.26 மற்றும் 19.06.26 ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது.

பயிற்சி கட்டணமாக நபர் ஒருவருக்கு ரூ.3,540/- வசூலிக்கப்படுகிறது. பதிவுக்கு குறைந்த எண்ணிக்கையிலான இடங்களே உள்ளது.

மேலும் பதிவுக்கு : மின்னஞ்சல் : business@tnau.ac.in, தொலைப்பேசி எண் : 0422 - 6611310, கைப்பேசி எண் : 82206 61228, 99949 89417 தொடர்பு கொள்ளலாம்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் பழங்களை மூலப் பொருளாக கொண்ட உணவுகள் : ஓர் அலசல் ஆய்வு

**அடுப்பில்லா பழ உணவுகளின் பட்டியல் மற்றும் செய்முறை விளக்கங்கள்**

அடுப்பில்லா சமையலில் பழங்களைப் பயன்படுத்தி பலவிதமான சுவையான மற்றும் ஆரோக்கியமான உணவுகளைத் தயாரிக்கலாம்.

சில பிரபலமான உணவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

### 5. பழ பர்கர் (Fruit Burger)

**தேவையான பொருட்கள்**

- ஆப்பிள் துண்டுகள் – 2 (பர்கர் பன் வடிவில் வட்டமாக நறுக்கியது)
- வாழைப்பழம் – 1 (வட்டமாக நறுக்கியது)
- ஸ்ட்ராபெர்ரி – சில (நறுக்கியது)
- பன்னீர் அல்லது சீஸ் துண்டுகள் – சில (விருப்பத்திற்கேற்ப)
- தேன் அல்லது சாக்லேட் சிரப் – அலங்கரிக்க

**செய்முறை விளக்கம்**

1. ஒரு ஆப்பிள் துண்டின் மீது பன்னீர் அல்லது சீஸ் துண்டுகளை வைக்கவும்.

2. அதன் மேல் வாழைப்பழம் மற்றும் ஸ்ட்ராபெர்ரி துண்டுகளை அடுக்கவும்.

3. மற்றொரு ஆப்பிள் துண்டால் மூடி, தேன் அல்லது சாக்லேட் சிரப் கொண்டு அலங்கரித்து பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

# சமச்சீர் உர மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி



திருச்சி, மே 26

திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் சமச்சீர் உர பயன்பாடு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி அந்தநல்லூர் வட்டாரத்தைச் சார்ந்த சிறுகமணி கிராமத்தில் நடைபெற்றது. இதில் விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர்.

வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி சமச்சீர் உர மேலாண்மையின் முக்கியத் துவம் குறித்து விளக்கினார். உழவியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் ராதிகா, பேசுகையில் பயிர் சாகுபடியில் விவசாயிகள் சமச்சீர் உர மேலாண்மை முறைகளை பின்பற்றுவதன் மூலமாக அதிக மகசூல் பெறலாம் என கூறினார். மேலும் இயற்கை மற்றும் உயிர் உரங்களின் மூலம் மண்ணின் வளத்தை மேம்படுத்தும் தொழில்நுட்பங்கள், மண்ணின் வளத்தை அறிய மண் பரிசோதனை செய்வதன் அவசியம் மற்றும் பரிசோதனைக்கு மண் மாதிரி மற்றும் பாசன நீர் மாதிரி எடுக்கும் முறை குறித்து தெளிவாக எடுத்துரைத்தார்.

தோட்டக்கலை துறை இணை பேராசிரியர் முனைவர் தனலட்சுமி பசுந்தாள் உரங்களை பயிருக்கு இடுவதன் மூலம் மண்ணின் வளம் எவ்வாறு மேம்படுத்தப்படுகிறது என்பது குறித்து விவரித்தார்.

பயிர் நோயியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கண்ணன், சமச்சீர் உர மேலாண்மை மூலம் பயிர் சாகுபடி செலவை பெருமளவில் குறைக்க முடியும் எனவும், அதிகளவு இரசாயன உரங்களை பயன்படுத்துவதன் மூலம் மண் மற்றும் நீர் மாசடைவது மற்றும் விளைபொருட்களின் தரம் குறைவ துடன் சாகுபடி செலவு அதிகரிக்கிறது எனவும் விரிவாக எடுத்துரைத்தார்.

# தலைவாசலில் வேளாண் திட்டங்கள் விழிப்புணர்வு முகாம்



சேலம், மே 26

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம் சார்பாக, அரசின் வேளாண்மைத் துறை திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு மற்றும் பாரத பிரதமரின் கௌரவ நிதித் திட்ட (PM-KISAN) சிறப்பு முகாம் தலைவாசல் வட்டார வளர்ச்சி அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குச் சேலம் வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன் தலைமை தாங்கினார். தலைவாசல் வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் முன்னிலை வகித்தார். முகாமில், விவசாயிகள் அனைவரும் தங்களது 'விவசாயிகள் அடையாள எண்' பதிவை மேற்கொள்வதன் முக்கியத்துவம் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இந்த முறையான விவசாயப் பதிவைச் செய்து கொண்டால் மட்டுமே, அரசின் பல்வேறு மானியங்களையும் திட்டப் பலன்களையும் தொடர்ந்து பெற முடியும் என அதிகாரிகள் வலியுறுத்தினர். இதனைத் தொடர்ந்து, முகாமில் பங்கேற்ற ஏராளமான விவசாயிகள் தங்களது விபரங்களை ஆன்லைனில் சரிபார்த்துக் கொண்டனர்.

இவ்விழிப்புணர்வு முகாமில் பல்வேறு அரசுத் துறை அதிகாரிகள் கலந்துகொண்டு தங்களது துறைகளில் உள்ள திட்டங்கள் குறித்துப் பேசினர். விதை ஆய்வாளர் கல்பனா, கால்நடை மருத்துவர் அனிதா, வனச்சரகர் கௌவ்சிக், தோட்டக் கலை அலுவலர் பிரபாவதி, பட்டுவளர்ச்சி அலுவலர் சுந்தர், வணிக வேளாண்மை அலுவலர் சுரேந்தர், மண்டல துணை வட்டாட்சியர் உமா மற்றும் கூட்டுறவு துறை செயலாளர் முருகேசன்

ஆகியோர் விவசாயிகளுக்குத் தேவையான ஆலோசனைகளையும் திட்ட விபரங்களையும் வழங்கினர். இம்முகாமில் வேளாண்மை அலுவலர் ஜானகி, துணை வேளாண்மை அலுவலர் மணவழகன், உதவி விதை அலுவலர் சாமிநாதன், ஆத்மா திட்ட அலுவலர்கள் சக்தி, ரமேஷ் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள், உதவி தோட்டக்கலை அலுவலர்கள் கலந்து கொண்டனர். மேலும், முன்னோடி விவசாயிகள், இயற்கை விவசாய ஆர்வலர் குழுப் பொறுப்பாளர்கள் மற்றும் விவசாயிகள் பலர் இக்கூட்டத்தில் திரளாகக் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



# வீட்டுத் தோட்டத்தில் என்னென்ன காய்கறிகள் போடலாம்? எப்படி பாதுகாக்கலாம்?

நமது ஆரோக்கியத்திற்குத் தேவையான நஞ்சில்லாத காய் கறிகள், கீரைகளை வீட்டிலேயே எளிதாக உற்பத்தி செய்ய வீட்டுத்தோட்டம் மைக்கலாம். வீட்டுத் தோட்டத்தில் காய்கறிகள் விளைந்து அதை உபயோகப்படுத்தும் போது ஏற்படும் சந்தோ சத்திற்கு அளவே இருக்காது.



அதன் ஒவ்வொரு பருவமும் பார்ப்பதற்கு மிகவும் அழகாக, உணர்வுபூர்வமாக இருக்கும். செயற்கையான பூச்சிக் கொல்லிகள் எதுவும் தெளிக்காமல் இயற்கையான முறையில், காய்கறிகளை விளைவிக்கும் பொழுது அதில் கிடைக்கும் ருசியும் தனித்தன்மையுடன் இருக்கும்.

வருடத்தில் ஒவ்வொரு பருவ காலத்தில் ஒவ்வொரு விதகாய் கறிகள் விளையக்கூடும். அதனால் இடத்தை சிறு சிறு பகுதிகளாக பிரித்து பாத்திகட்டி பயிர் நடவேண்டும். பகுதிகளாக பிரிக்கப்பட்ட நிலங்களுக்கு நடுவே கட்டப்பட்ட பாத்திகளில் கத்தரிக்காய் தக்காளி, மிளகாய், வெண்டைக்காய், முள்ளங்கி, டர்னிப், பீட்ரூட், கேரட் செடி அவரை போன்ற காய்கறிகளை விளைவிக்கலாம். செடிகளை அதிகாலை நேரங்களில் நடுவது நல்லது.

முட்டைக்கோஸ், காலிபிளவர், கத்தரிக்காய் போன்றவை சற்று நாள்பட வளரும் காய்கறிகள். இந்த செடிகளின் இடையே வேகமாக வளரக்கூடிய முள்ளங்கி, டர்னிப், பசலைக்கீரை பாலக் மற்றும் அனைத்து கீரை வகைகளையும் நடலாம்.

பப்பாளி, வாழை, நார்த்தை, எலுமிச்சை, முருங்கை, மாமரம் முதலியவற்றை தோட்டத்தின் வடக்கு பக்கமே நட வேண்டும். ஏனெனில்மற்ற இடங்களில் இதை வளர்த்தால், அவற்றின் நிழல் காய்கறி செடிகளின் மீது பட்டு அவற்றை வளர விடாமல் தடுத்து விடும். பீர்க்கன்காய், புடலங்காய், சுரைக்காய், பீன்ஸ், அவரை போன்ற கொடிகளாக விளையும் செடிகளை நூல் அல்லது சணல் மூலம் அழகான முறையில் வேலிகள் மீது படர விடலாம். தோட்டம் போட இடம் இல்லாதவர்கள் செடிகளை தொட்டிகளிலோ, பெட்டிகளிலோ, மூங்கில் கூடைகளிலோ, மெண்ட் தொட்டிகளிலோ, பழைய பிளாஸ்டிக் பக்கெட்களிலோ போடலாம். செடிக்கு விடப்படும் தண்ணீர் மிகவும் உப்புத் தண்ணீராக இருக்கக் கூடாது.

வீட்டு காய்கறி தோட்டம் அமைப்பதற்கான முக்கிய குறிப்புகள்

1,500 சதுர அடி பரப்பளவில் சாகுபடி செய்தால் ஐந்து பேரைக் கொண்ட ஒரு குடும்பத்திற்கு ஓராண்டுக்கான காய்கறி மற்றும் பழத் தேவைகளில் கிட்டத்தட்ட பாதியைப் பூர்த்தி செய்யப் போதுமான விளைச்சலை பெற முடியும்.

**இடத்தைத் தேர்வு செய்தல்**

வீட்டில் காய்கறி தோட்டம் அமைக்க தினமும் 6-8 மணி நேரம் போதுமான சூரிய ஒளி கிடைக்கும் இடத்தை தேர்வு செய்து, மண்ணை நன்கு உழுது, தொழுஉரம் (மாட்டு சாணம், மண்புழு உரம்) சேர்த்து பாத்திகள் அமைக்க வேண்டும். தண்ணீர் தேங்காத சம தளமான இடத்தை தேர்வு செய்யவும். நிலத்தில் இடம் இல்லையெனில், மாடித் தோட்டம் அல்லது தொட்டிகளில் வளர்க்கலாம்.

**மண் தயாரிப்பு**

செடிகள் நன்கு செழித்து வளர வளமான மண் மிக முக்கியம். மண்ணை 6-8 அங்குல ஆழத்திற்கு நன்கு கொத்தி விடவும். கற்கள் மற்றும் களைகளை அகற்றவும். களி மண்ணாக இருந்தால் செடிக்கு விடப்படும் தண்ணீர் வடியாமல் தங்கியிருக்கும். இதற்கு மணலையும் இயற்கை உரத்தையும் சேர்த்து நிலத்தை சரிப்படுத்த வேண்டும். ஆற்று மணலாக இருந்தால் அந்தப் பகுதியில் செடிக்கு தேவையான அளவு தண்ணீர் தங்காது. எனவே, தேவைக்கேற்ப செம்மண் கலந்து இயற்கை உரத்தையும் கலந்து கொள்ளவும்.

மண்ணுடன் தொழுஉரம், மண்புழு உரம் அல்லது தேங்காய் நார்கழிவு சேர்த்து மண் கலவையை வளப்படுத்தவும். அடி உரமாக வேப்பம் புண்ணாக்கு, ஆட்டுச் சாணம், மாட்டுச் சாணம், காய்கறிக் கழிவுகள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம். இப்படி தயார் செய்த மண் கலவையில் உடனடியாக விதைகளை விதைத்து விடக் கூடாது.

மண்ணைத் தொட்டியில் நிரப்பி, ஐந்து நாள் தண்ணீர் தெளிக்க வேண்டும். இதனால் மண்ணில் நுண்ணியிரி உருவாகும். செடிகளின் வளர்ச்சியும் நன்றாக இருக்கும்.

### பாத்திகள் அல்லது தொட்டி அமைத்தல்

நிலத்தில் பயிரிடுவதாக இருந்தால், நடைபாதை வசதியுடன் பாத்திகளை அமைக்கவும். தொட்டிகளில் வளர்ப்பதாக இருந்தால், 45-72 செ.மீ விட்டமும், ஆழமும் கொண்ட தொட்டி களைப் பயன்படுத்தவும். அடிப்பகுதியில் நீர் வெளியேற துவாரங்கள் இருப்பதை உறுதி செய்யவும்.

தொட்டிகளில் செடியை வளர்ப்பவர்கள் குறிப்பாக ஒன்று முதல் ஒன்றரை அடி ஆழமான சிமெண்ட் தொட்டிகளை பயன் படுத்தினால், திரும்பத் திரும்ப செடிகளை நடுவதற்கு வசதியாக இருக்கும். தொட்டியில் செம்மண், மணல், கார்டன் ப்ளூம்/ தொழுவரம்/ தென்னங்கழிவு உரத்தை 3:2:1 என்ற விகிதத்தில் கலக்கவும்.

### பயிர் தேர்வு

தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்தமல்லி, கீரை வகைகள் மற்றும் புதினா கீரை போன்ற எளிதில் வளரக்கூடிய செடிகளை த்தேர்ந்தெடுத்து, தரமான விதைகள் அல்லது நாற்றுகளை நட்டு, தினமும் நீர் ஊற்றி, இயற்கை உரங்களைப் பயன்படுத்தி ஆரோக்கியமான காய்கறிகளை அறுவடை செய்-யலாம்.

விதைகளை நேரடியாகப் பாத்தியில் விதைக்கலாம் அல்லது நாற்றுக்களாக வளர்த்து நடலாம். அந்தந்த பருவத் திற்கு ஏற்றகாய் கறிகளை நடவு செய்யவும். வெண்டை, கீரை, போன்றவற்றை நேரடியாகவிதைக்கலாம். கத்தரி, தக்காளி, மிளகாய் போன்றவற்றிக்கு குழித்தட்டுகளில் நாற்று நடவு செய்து அதன்பின் பெரிய தொட்டிகளுக்கு மாற்ற வேண்டும்.

## நீர் மேலாண்மை

தினமும் காலை அல்லது மாலை வேளையில் செடிகளுக்கு தேவையான அளவு நீர் ஊற்ற வேண்டும். அதிக தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்கவும்.

## உரமிடுதல்

15-20 நாட்களுக்கு ஒரு முறை மண்புழு உரம், பஞ்சகவ்யா, மீன் அமிலம் போன்ற இயற்கை உரங்களை இடலாம். சடிகளுக்கு இடையே முளைக்கும் தேவையற்ற களைகள் செடிகளை அகற்ற வேண்டும். பஞ்சகவ்யா மற்றும் வேப்ப எண்ணெய் கரைசல் ஆகியவற்றைப் பயன்படுத்தி செடிகளைப் பூச்சிகளிடமிருந்து பாதுகாத்து, செழிப்பாக வளர்க்கலாம். பூச்சி மருந்து தெளிக்காமல் இயற்கையான பூச்சிக்கொல்லிகளை தேர்ந்தெடுத்து தெளிக்க வேண்டும். அதிக சூரிய வெளிச் சத்திலோ, மழைக் காலத்திலோ, வேகமாக காற்றடிக்கும் போதோ பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தக்கூடாது.

## வீட்டுக் காய்கறித் தோட்டத்தின் பயன்கள்

● அதிக ஊட்டச்சத்து நிறைந்த காய்கறிகள் மற்றும் பழங்கள் கிடைக்கும்.

● நச்சு மருந்துகள் இல்லாத பழம் மற்றும் காய்கறிகளை உற்பத்தி செய்யலாம்.

● காய்கறிகள் வாங்குவதற்கான செலவைக் குறைக்க முடிகின்றது.

● வீட்டுக் காய்கறித் தோட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளானது கடைகளில் வாங்குவதைக் காட்டிலும் சுவையாக இருக்கும்.

● சமையலறையில் வீணாகும் நீர் மற்றும் பொருட்களை உபயோகமாக பயன்படுத்த முடிகின்றது.

● உடலிற்கும் மனதிற்கும் நல்ல ஆரோக்கியம் கிடைக்கிறது.

இயற்கை உரங்களை போட்டு வளர்க்கப்படும் செடிகளில் வளரும் காய்கள் சுவையாக இருப்பதோடு மட்டுமல்லாமல் உடல்நலத்திற்கு மிகவும் உகந்தவையாக இருக்கும்.

தகவல் : *கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். 82480 80922.*


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# கழிவுகளை காசாக மாற்றலாம் எப்படி?



இயற்கையின் படைப்புகளை எண்ணும் போது ஆச்சரியமாக இருக்கிறது. எந்த ஒரு பொருளும் (கழிவுகள்) வீணாகுவதில்லை. எல்லாமே மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி காசாக (MONEY) மாற்றலாம். எடுத்துக்காட்டாக பயிர்களிலுடன் வளரும் களைச்செடிகள் (WEEDS) உணவு பொருளாகவும், மருத்துவ குணமுள்ள பொருளாகவும் மாற்றலாம்.

அதுபோல வாழை மட்டைகளிலிருந்து நார் திரித்து துணிகள் உற்பத்தி செய்யலாம். வெளிநாட்டு வரவான பார்த்தினியத்தை ஊட்டமேற்றிய கம்போஸ்ட் யாக மாற்றலாம். குளம், குட்டைகளில் வளரும் ஆகாய தாமரை தண்டுகளிலிருந்து பயனுள்ள மதிப்புக்கூட்டப்பட்ட பொருள் தயாரித்து விற்பனை செய்யப்படுகிறது. இப்படியே சொல்லிக் கொண்டே போகலாம் நிறைய. தமிழக அரசு ஒவ்வொரு மாநகராட்சியிலும் திடக்கழிவு மேலாண்மை கடைபிடித்து வருகிறது.

**ஆப்பிரிக்காவில் கழிவுகளை மாற்றும் எப்படி?**

ஆனால் ஆப்பிரிக்காவில் உள்ள மக்கள் பாலித்தின் பை, கவர் போன்றவற்றை மறு சுழற்சி (RECYCLING PROCCING) மூலமாக அவற்றை அடித்து நெருக்கி காய்ச்சி அதிலுள்ள கசடுகளை அப்புறப்படுத்தி அதனை கம்பம் வேலியாக உறுமாற்றி பயன்படுத்துகிறார்கள். இவ்வாறாக செய்வதால் கழிவுகள் பயனுள்ள பொருளாக மாறிவிடுகிறது. சாலையோரங்களில் மலைபோல குவிந்து இருக்கும் குப்பைகளை (WASTE MANAGEMENT) சரி செய்ய முடிகிறது.

இதனால் அந்த நாட்டு அரசாங்கத்திற்கு கணிசமாக செலவும் குறைகிறது. கம்பங்களை வாங்கிட மக்கள் மரங்களை வெட்ட வேண்டிய தில்லை. சுற்றுப்புற சூழலும் பாதிக்கப்படுவதில்லை. வயலில் நடப்படும் கம்பங்கள் பாதுகாக்கவும் கரையான் அரிக்காமல் நீண்ட நாட்களாக உழைக்கும் தன்மை உடைய தால் அந்த நாட்டு மக்களுக்கு மிகவும் குறைந்த விலையில் தரமான வேலி கம்பங்கள் கிடைப்பதால் ஆர்வமாக வாங்கி தங்களுடைய நிலங்களுக்கு வேலி அமைக்கின்றனர்.

இத்தகைய சூழலில் எந்த ஒரு கழிவும் வீணாகாமல் பணமாக மாறும். இதற்கு நம்மக்கள் மாத்தி யோசிக்க வேண்டும். மக்காத கழிவை கூட காசாக மாற்றலாம் என்ன நீங்க தயாரா?

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# கோடையில் பருத்தி சாகுபடி

பருத்தி கரிசல் மண்ணில் விளையும் வெள்ளை தங்கம். இது விவசாயிகளுக்கு அதிக வருமானத்தை தரும் ஒரு பணப்பயிர். கோடை கால இறவை பருத்தி சாகுபடி மாசிப்பட்டத்தில் (பிப்ரவரி மற்றும் மார்ச் மாதம்) பயிரிடப்படுகிறது. இக்காலத்தில் பயிர் செய்வதற்கு எம்.சி.யூ 5,12,13, சுரபி எஸ்.வி.பி.ஆர் 2, சுப்ரியா ஏற்ற இரகங்கள் ஆகும்.

பஞ்சு நீக்காத விதையை ஏக்கருக்கு 6 கிலோ, பஞ்சு நீக்கிய விதையை ஏக்கருக்கு 3 கிலோ பயன்படுத்தலாம். பஞ்சு நீக்காத விதைகளை அமில விதை நேர்த்தி செய்ய வேண்டும். ஒரு பிளாஸ்டிக் பக்கெட்டில் ஒரு கிலோ பஞ்சு நீக்காத விதைகளை எடுத்து அதில் 100 மிலி அடர்கந்தக அமிலத்தை ஊற்றி, மரக் குச்சியால் கலக்க வேண்டும். விதைகள் காபிக்கொட்டை நிறம் வரும் வரை கலக்க வேண்டும். பின்னர் வேறு பக்கெட்டில் நீர் நிரப்பி 4-5 முறை இந்த விதைகளை அதில் நன்கு கழுவி, நிழலில் உலர்த்தி விதைக்கலாம்.

விதை மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த விதைத்த 24 மணி நேரத்துக்கு முன்பு ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார் பென்டாசிம் மருந்து கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். 1 பொட்டலம் அசோஸ்பைரில்லம் மற்றும் 1 பொட்டலம் பாஸ்போ

பாக்டீரியா ஆகிய உயிர் உரங்களை ஆறிய ஆடையில்லா அரிசிக் கஞ்சியில் கரைத்து பூஞ்சாண விதை நேர்த்தி செய்து நிழலில் 15 நிமிடம் உலர வைத்து விதைக்க வேண்டும்.

விதைப்பதற்கு பயன்படுத்தும் விதைகளுக்கு புறத்தூய்மை 98 சதவீதம், ஈரப்பதம் 10 சதவீதம், முளைப்புத்திறன் இரகத்திற்கு 65 சதவீதம், வீரிய விதைகளுக்கு 75 சதவீதமும் இருத்தல் அவசியம். விதைப்புக்கு பயன்படுத்தும் விதையின் தரத்தை பரிசோதனை செய்து பயன் பெறுமாறு திருநெல்வேலி விதைப் பரிசோதனை அலுவலர், ஞா.ஆனந்தி ராதிகா தெரிவித்தார்.



# நிலக்கடலை விதைப்பண்ணை அமைத்து அதிக லாபம் பெறலாம்!

நிலக்கடலையில் விதைப்பண்ணை அமைப்பதன் மூலம் விவசாயிகள் அதிக இலாபம் பெற இயலும். விதைப்பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள் அரசு சான்று பெற்ற விதை களை வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் வாங்கி விதைப்பண்ணை அமைக்கலாம் என நாமக்கல் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் இரா.கலைச்செல்வி கூறியுள்ளதாவது, மண் மற்றும் விதைகள் வழியாக பரவும் நோய்களால் நிலக்கடலையில் இளஞ்செடிகள் பாதிக்கப்பட்டு பயிர் எண்ணிக்கை குறைந்து விளைச்சல் பாதிக்கப்படுகிறது. இதனைத் தவிர்க்க ஒரு கிலோ நிலக்கடலை விதைக்கு உயிர் பூஞ்சாணக் கொல்லியான டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம் மற்றும் சூடோமோனாஸ் 10 கிராம் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதைப்பதற்கு ஒரு நாளுக்கு முன்பாக விதைநேர்த்தி செய்வதால் நோய்கள் வராமல் பயிருக்கு பாதுகாப்பு கிடைக்கிறது.

வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் குறைந்த விலையில் கிடைக்கும் உயிர் உரங்களை நிலக்கடலை விதை உடன் கலந்து விதைப்பதன் மூலம் உரச்செலவை குறைக்க லாம். மண்ணின் இயல்பான தன்மையையும் பாதுகாக்க இயலும். எக்டருக்கு தேவையான விதைப்பருப்புடன் 500 மிலி நிலக்கடலை ரைசோபியம் உயிர் உரம் கலந்து விதைப்பதன் மூலம் நைட்ரஜனை பயிர்கள் நிலைப்படுத்தி தழைச்சத்தும் மற்றும் 500 மிலி பாஸ்போபாக்டீரியா உயிர் உரம் கலந்து விதைத்தால் பயிருக்கு தேவையான மணிச்சத்தும் கிடைப்பதால் உரத்தேவை குறைவதோடு, மண் வளமும் பாதுகாக்கப்படு கின்றது. விதை நேர்த்தி செய்யும் பொழுது விதைகள் உரத்துடன் எளிதில் ஒட்டும் வகையில் சாதம் வடித்த கஞ்சியில் சேர்த்து நிழலில் உலர்த்தியபின் விதைக்க வேண்டும். விதைத்த 30 நாட்களுக்குள் அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை அணுகி விதைப்பண்ணையை உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்ய வேண்டும். விதைப் பண்ணையில் உரிய வயல் தரங்களை பராமரித்து தரமான காய்களை உற்பத்தி செய்து, சுத்திகரிப்பு செய்து வழங்குவதன் மூலம் அதிக இலாபம் ஈட்ட இயலும்.

# பசுமை பரிமாற்றம் : வேளாண் மாணவர்களின் புதிய முயற்சி – பஞ்சகவ்யம் தயாரிப்பு

கடலூர், மே 26

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் புலத்தைச் சேர்ந்த IV ஆண்டு இளங்கலை வேளாண்மை பயிலும் AB Batch மாணவ மாணவியர் ELAGR 401 - Agriculture Waste Management மற்றும் ELAGR 402 - Organic Production Technology (Experiential Learning - அனுபவ வழிக் கற்றல்) பாடங்களின் ஒரு பகுதியாக, பஞ்சகவ்யம் (panchakavya) தயாரிப்பு தொடர்பான நடைமுறை பயிற்சியை கல்வி மற்றும் பயிற்சி நோக்குடன் முறையாக மேற்கொண்டனர்.

இந்தப் பயிற்சி கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் நடைபெற்றது. இதில் மொத்தம் 45 மாணவர்கள் பங்கேற்று, பஞ்சகவ்யத்தின் பயன்பாடு, அதன் இயற்கை வேளாண்மையில் உள்ள முக்கியத்துவம் மற்றும் தயாரிப்பு முறைகள் குறித்து நேரடி பயிற்சி பெற்றனர். இப்பயிற்சி முனைவர் K. சுசீந்திரன், உதவிப் பேராசிரியர், முனைவர் R.கிருஷ்ணமூர்த்தி, உதவிப் பேராசிரியர் மற்றும் முனைவர் A.சுந்தரி, பேராசிரியர் மற்றும் உழவியல் துறைத் தலைவர் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் சிறப்பாக நடத்தப்பட்டது.

**பஞ்சகவ்யம் தயாரிக்க தேவையான பொருட்கள்**

மாட்டு சாணம்

மாட்டு சிறுநீர் (கோமியம்)

நாட்டு மாட்டு பால்

தயிர்

நெய்

**தயாரிப்பு முறை**

● மாட்டுச் சாணம் மற்றும் நெய்யை முதல் நாள் நன்கு கலந்து மூடி வைக்கவும். தினமும் இரண்டு வேளைகளிலும் நன்கு கலக்கவும்.

● மூன்று நாட்களுக்குப் பிறகு மீதமுள்ள மூன்று பொருட்களான தயிர், நெய் மற்றும் மாட்டு சிறுநீர் (கோமியம்) இம்மூன்றையும் அத்துடன் கலந்து 15 முதல் 20 நாட்களுக்கு காலை, மாலை என இரு வேலைகளும் நன்கு கலக்கவும்.

● பஞ்சகவ்யா தயார் செய்யும் பாத்திரம் நிழலான இடத்தில் காடா துணி அல்லது கொசு வலை கொண்டு மூடி வைத்தல் வேண்டும். ஏனென்றால் ஈக்கள் அதில் முட்டையிட்டு புழுக்களை உருவாக்கிட நேரிடும்.

● 30 நாட்களில் பஞ்சகவ்யா தயாராகி விடும்.

**பயன்படுத்தும் முறை**

● பொதுவாக பஞ்சகவ்யா அனைத்து பயிர்களுக்கும் தெளிக்க படலாம் (3 லிட்டர் பஞ்சகவ்யா 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.)

● பாசன நீருடன் பஞ்சகவ்யாவை 50 லிட்டர் ஹெக்டேர் மூலம் பயிர்களுக்கு கொடுக்கலாம்.

**பஞ்சகவ்யா பயன்கள்**

● வளர்ச்சி ஊக்குவிப்பது - செடிகளின் உயரம், இலை வளர்ச்சி மற்றும் வேர்களை மேம்படுத்தும்.

● பூக்கும் மற்றும் பழம் தரும் செடிகளில் - செடியின் பழுதுகளை குறைத்து, வளரும் விகிதத்தை அதிகரிக்கும்

● நுண்ணுயிர் சீரமைப்பு – மண்ணின் உயிரணுக்கள் மற்றும் நுண்ணுயிர்களை சீராக வளர்க்க உதவும்.

● பொருட்களின் ஊட்டச்சத்துமிக்க பயன்பாடு- அனைத்து முக்கிய ஊட்டச் சத்துக்கள் மற்றும் ஹார்மோன்களை செடிகளுக்கு வழங்கும் பயிர் நோய் தடுப்பு – சில பூஞ்சை மற்றும் நோய் தாக்கங்களை குறைக்கும். செடிகளின் உயரம், இலை வளர்ச்சி மற்றும் வேர்களை மேம்படுத்தும். செடிகளின் உயரம், இலை வளர்ச்சி மற்றும் வேர்களை மேம்படுத்தும் சுற்றுச்சூழல் நன்மை – ரசாயன பூச்சிக் கொல்லி இல்லாமல் இயற்கையாக பயிர்களை காப்பாற்ற உதவும்.

இதனை அபிரூபா தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# இளைஞர்களை தொழில்முனைவோராக்கும் காளான் வளர்ப்பு குறித்த பயிற்சி நடைபெற்றது



திருச்சி, மே 26

திருச்சி மாவட்டம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக இளைஞர்களை தொழில்முனைவோராக்கும் முக்கிய துறையாக விளங்கும் காளான் வளர்ப்பு குறித்த ஒரு நாள் நிலைய பயிற்சி 26.05.26 அன்று சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சியில் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி பயிற்சியை துவக்கி வைத்து இளைஞர்களை தொழில் முனை வோராக்குவதில் காளான் உற்பத்தி பெரும் பங்கு வகிக்கிறது என கூறினார். வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் (பயிர் நோயியல்) முனைவர் கண்ணன், உணவுக் காளான் மற்றும் நச்சுக் காளானை வகைப்படுத்துதல், காளான் வளர்ப்பின் முக்கியத்துவம், காளானின் நன்மைகள், காளான் படுக்கை தயாரிப்பு, சிப்பி காளான் வளர்ப்பு, காளானை பராமரித்தல் போன்ற தலைப்புகளின் கீழ் தொழில்நுட்ப உரை வழங்கினார். மேலும் காளான் வளர்ப்பில் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் அவற்றின் தீர்வுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். பின்னர், காளான் படுக்கை தயாரித்தல் குறித்து செய்முறை விளக்கம் செய்து காட்டப்பட்டது.

காளான் மதிப்பு கூட்டுதலில் சாதனை தொழில் முனைவோராக விளங்கும் எட்வின்நகோமி, காளானில் மதிப்புகூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து தெளிவாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் திருச்சி, கரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த 65க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# வெப்பத்தைத் தாங்கும் பயிர் மேலாண்மை உத்திகள்

**கோடை உழவு :** கோடை மழையைப் பயன்படுத்தி சரிவுக்குக் குறுக்காக நிலத்தை உழவு செய்வதன் மூலம் மண்ணின் ஈரப்பதத்தைச் சேமிக்கலாம்.

**வெப்பத்தைத் தாங்கும் இரகங்கள் :** அதிக வெப்பத்தைத் தாங்கி வளரக்கூடிய பயிர் இரகங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**பயிர் சுழற்சி மாற்றம் :** வெப்ப அலை வீசும் காலங்களில் (பொதுவாக ஏப்ரல்-ஜுன்) விதைப்பு நேரத்தை மாற்றுவது அல்லது பயிர் சுழற்சியை மாற்றுவது அவசியம்.

**நிலப் போர்வை அல்லது மூடாக்கு :** மண்ணின் ஈரப்பதத்தைத் தக்க வைக்க காய்ந்த இலைகள், வைக்கோல் பயன்படுத்தி மூடாக்கு போட வேண்டும்.

**நிழல் வலைகள் :** பயிர்களை நேரடி சூரிய ஒளியிலிருந்து பாதுகாக்க நிழல் வலைகளைப் பயன்படுத்தலாம்.

**கயோலின் தெளிப்பு :** 5% காயோலின் (Kaolin) கரைசலைத் தெளிப்பதன் மூலம் இலைகளின் வெப்ப நிலையைக் குறைத்து, அதிகப்படியான நீராவிப்போக்கைத் தடுக்கலாம்.

**கடல்பாசி சாறுகள் :** அஸ்கோபில்லம் நோடோசம் (Ascophyllum nodosum) எனப்படும் கடல்பாசியிலிருந்து பெறப்படும் உயிர்-ஊக்கிகளில் மேனிடால் மற்றும் பாலிசாக்கரைடுகள் நிறைந்துள்ளன. இவை பயிர்களில் உள்ள நச்சுத் தனிமங்களை சமநிலைப்படுத்துவதுடன், உச்சி வெயில் நேரத்திலும் இலைகளின் வெப்பநிலையை சீராகவும், குளிர்ச்சியாகவும் வைத்திருக்க உதவுகின்றன. 500ml/ஏக்கர் வரை பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.

**பூசா ஹைட்ரோஜெல் (Pusa Hydrogel) :** இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தால் (IARI) உருவாக்கப்பட்ட ஒரு உறிஞ்சும் பாலிமர் ஆகும். இது மண்ணில் நீரைச் சேமித்து வைத்து, தாவரங்களுக்குத் தேவைப்படும்போது மெதுவாக வெளியிடும் திறன் கொண்டது.

**செயல்பாடு :** இது தனது எடையை விட பல மடங்கு அதிக நீரை உறிஞ்சி சேமிக்கும். இதனால் வறட்சி காலங்களிலும் பயிர்கள் காய்ந்து விடாமல் வளர உதவுகிறது.

**பயன்பாடு :** ஒரு ஏக்கருக்கு சுமார் 1 முதல் 2.5 கிலோ வரை பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. இது மண்ணில் ஒரு வருடம் வரை செயல்படும், அதன் பிறகு தானாகவே மட்கிவிடும்.

**நன்மைகள்**

- நீர்ப்பாசனத் தேவையைக் குறைக்கிறது (சுமார் 40-50% நீர் சேமிப்பு).
- உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் நீரில் கரைந்து வீணாவதைத் தடுக்கிறது.
- மண்ணின் ஈரப்பதத்தைத் தக்க வைத்து விளைச்சலை அதிகரிக்கிறது.

**வடிவம் :** இது பொதுவாக குருணை (Granules) வடிவில் கிடைக்கிறது.

**நீர் மேலாண்மை**

**சொட்டு நீர்ப்பாசனம் :** நீர் இழப்பைக் குறைத்து, வேர்ப் பகுதியில் நேரடி நீர் வழங்க சொட்டு நீர்ப்பாசனம் சிறந்தது.

**பாசன நேரம் :** நீர் ஆவியாவதைத் தடுக்க காலை அல்லது மாலை வேளைகளில் பாசனம் செய்ய வேண்டும்.

**தெளிப்பு நீர் பாசனம் :** பயிர்களின் மேல் நீர் தெளிப்பதன் மூலம் பயிர் சூழலில் வெப்பத்தைக் குறைக்கலாம்

**பயிர்களுக்கான தெளிப்பு**

- பயிர்களுக்கு வெப்பத்தைத் தாங்க 'பிங்க் பிக்மென்டட் மெத்திலோட்ரோபிக்' (PPFM - 200 ml / ஏக்கர்) தெளிக்க பரிந்துரைக் கப்படுகிறது.
- மா மற்றும் இதர தோட்டக்கலைப் பயிர்களில் அதிக வெப்பத்தால் ஏற்படும் பூக்கள் மற்றும் பிஞ்சுகள் உதிர்வதைத் தவிர்க்க 3% பஞ்சகாவ்யா கரைசலைத் தெளிக்கலாம்.
- **மல்லிகை :** வெப்பத்தைத் தாங்கி அதிக மலர்கள் பூக்க 3% பஞ்சகாவ்யா மற்றும் 0.4% ஹ்யூமிக் அமில (Humic acid) கரைசலை மாதம் ஒருமுறை தெளிக்கலாம்.

● **வாழை :** கோடை காற்றால் வாழை மரங்கள் சாய்வதைத் தடுக்க 5 மாதங்களுக்கு மேலான மரங்களுக்கு முட்டுக் கொடுக்க வேண்டும்.

**மண்ணின் உப்புத் தன்மை (Salinity Management)**

கோடையில் நிலத்தடி நீர் மட்டம் குறையும் போது நீரின் உப்புத்தன்மை அதிகரிக்கும். இதைத் தவிர்க்க அடிக்கடி நீர்பாய்ச்சுவதுடன், இலைகளின் ஓரங்கள் கருகினால் தகுந்த நுண்ணூட்டச்சத்துக்களை வழங்க வேண்டும்.



# E-Renting செயலி - ஒரு பார்வை




E-Renting App என்பது மொபைல் செயலி அல்லது இணைய தளம் மூலம் விவசாய இயந்திரங்களை வாடகைக்கு முன்பதிவு செய்யும் டிஜிட்டல் சேவையாகும்.

**விவசாயிகள் தங்களது மொபைல் போனில் :**

- அருகிலுள்ள இயந்திரங்களை காணலாம்
- வாடகை கட்டணத்தை அறியலாம்
- முன்பதிவு செய்யலாம்
- நேரடியாக உரிமையாளரை தொடர்புகொள்ளலாம்

இந்த முறை “உபர்” அல்லது “ஓலா” போன்று வேளாண் இயந்திர சேவையை வழங்குகிறது.

**தமிழகத்தின் e-Vaadagai 2.0 திட்டம்**

தமிழக அரசின் “e-Vaadagai 2.0” செயலி, விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்களை ஆன்லைன் மூலம் வாடகைக்கு பெற உதவும் முக்கிய டிஜிட்டல் சேவையாகும். இந்த செயலி “உழவர்” செயலியுடன் இணைக்கப்பட்டு, விவசாயிகள் தங்களது கிராமத்திலிருந்தே டிராக்டர், நெல் நடவு இயந்திரம், அறுவடை இயந்திரம், ட்ரோன் போன்றவற்றை முன்பதிவு செய்ய உதவுகிறது.

**e-Vaadagai செயலியின் சிறப்பம்சங்கள்**

- ஆன்லைன் முன்பதிவு
- வெளிப்படையான வாடகை முறை
- இடைத்தரகர் இல்லாத சேவை
- நேரடி தகவல் பரிமாற்றம்
- குறைந்த செலவில் இயந்திர பயன்பாடு

**செயலியின் பயன்பாடுகள்**

- விவசாய திட்ட தகவல்கள்
- வானிலை அறிவிப்பு
- சந்தை விலை
- இயந்திர வாடகை மையங்கள்
- பயிர் காப்பீட்டு தகவல்



**e-Vaadagai செயலியில் விண்ணப்பிக்கும் முறை மற்றும் முழுமையான செயல்முறை**




**செயலியை பயன்படுத்த தேவையானவை**

**விவசாயியிடம் இருக்க வேண்டியவை**

- ஸ்மார்ட்போன்
- இணைய வசதி
- ஆதார் எண்
- மொபைல் எண்
- வங்கி கணக்கு விவரம்
- நில விவரம் / பட்டா
- e-Adangal தகவல் (தேவையானால்)

தமிழக அரசின் e-Adangal முறை மூலம் நில விவரங்கள் ஆன்லைனில் சரிபார்க்கப்படுகின்றன.

**செயலியை பதிவிறக்கம் செய்வது எப்படி?**

**படி 1 – உங்கள் Android மொபைலில்**

- Google Play Store திறக்கவும்
- e-Vaadagai அல்லது Uzhavar App என தேடவும்

**படி 2 – Install பொத்தானை அழுத்தவும்**

- செயலி பதிவிறக்கம் ஆகும் வரை காத்திருக்கவும்




**படி 3 – Install முடிந்ததும்**

- Open அழுத்தவும்
- முதன்மை திரை திறக்கும்


**புதிய பயனாளர் பதிவு (New User Registration)**

**படி 1 – முதலில்**

- New User அல்லது Sign Up என்ற விருப்பத்தை தேர்வு செய்யவும்.

**படி 2 – பின்வரும் தகவல்களை நிரப்ப வேண்டும்**

- பெயர்
- ஆதார் எண்
- மொபைல் எண்
- மாவட்டம்
- வட்டம்
- கிராமம்




● கடவுச்சொல்

**படி 3 – மொபைலுக்கு OTP வரும்**

● OTP எண்ணை உள்ளிடவும்
● Verify அழுத்தவும்

**படி 4 – பதிவு நிறைவு**

**வெற்றிகரமாக பதிவு செய்யப்பட்டதும்**
● Login செய்யலாம்

### இயந்திரம் தேடுவது எப்படி?

**படி 1 – Machinery Section செல்லவும்**

**Login ஆன பிறகு**

● Farm Machinery
● Book Machinery
● Rental Services போன்ற பகுதிகளை தேர்வு செய்யவும்.

**படி 2 – இயந்திர வகை தேர்வு கிடைக்கும் இயந்திரங்கள்**

● Tractor
● Rotavator
● Paddy Transplanter
● Harvester
● Drone Sprayer
● Power Weeder

**படி 3 – மாவட்டம் / இடம் தேர்வு**

● உங்கள் மாவட்டம்
● அருகிலுள்ள மையம்
● கிராமம் தேர்வு செய்யவும்.

**படி 4 – தேதி தேர்வு**

● பயன்பாட்டு தேதி
● தேவையான நேரம் பதிவு செய்யவும்.

### முன்பதிவு செய்வது எப்படி?

படி 1 – Available Machines பார்க்கவும்

செயலியில்
● இயந்திர பெயர்
● வாடகை தொகை
● கிடைக்கும் தேதி பார்க்க முடியும்.

**படி 2 – Book Now அழுத்தவும்**

**தேவையான இயந்திரத்தை தேர்வு செய்து**

- Book
- அல்லது Reserve என்பதை அழுத்தவும்.

**படி 3 – நில விவரம் சேர்க்கவும்**

**சில நேரங்களில்**

- Survey Number
- ஏக்கர் அளவு
- பயிர் வகை போன்ற விவரங்கள் கேட்கப்படும்.

**படி 4 – உறுதிப்படுத்தல்**

**Booking முடிந்ததும்**

- SMS வரும்
- Booking ID கிடைக்கும். ஆன்லைன் கட்டணம் செலுத்துவது
- UPI
- Debit Car
- Net Banking மூலம் கட்டணம் செலுத்தலாம்.

**செயலி :** e-Receipt & SMS Confirmation வழங்கும்.

**இயந்திர ஒதுக்கீடு (Machine Allocation)**

**Booking செய்யப்பட்ட பிறகு**

- அருகிலுள்ள இயந்திர உரிமையாளர் தொடர்பு கொள்வார்
- Driver விவரம் பகிரப்படும்
- நேரம் உறுதி செய்யப்படும்

e-Vaadagai 2.0 செயலி விவசாயி மற்றும் சேவை வழங்குபவரை நேரடியாக இணைக்கிறது.

**இயந்திர உரிமையாளர்கள் பதிவு செய்யும் முறை**

**செயலியில் விவசாயிகள் மட்டுமல்லாமல்**

- Tractor Owners
- Custom Hiring Centres
- Cooperative Societies பதிவு செய்ய முடியும்.

**அவர்கள் அளிக்க வேண்டிய தகவல்கள்**

- இயந்திர விவரம்
- RC Book
- உரிமம்

- வாடகை கட்டணம்
- Location

தமிழகத்தில் ஆயிரக்கணக்கான தனியார் மற்றும் கூட்டுறவு இயந்திர உரிமையாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

**செயலியின் முக்கிய நன்மைகள்**

**விவசாயிகளுக்கு**

- குறைந்த செலவு
- நேர சேமிப்பு
- இடைத்தரகர் இல்லாமை
- அருகிலுள்ள இயந்திர வசதி

**அரசுக்கு**

- இயந்திர பயன்பாடு அதிகரிப்பு
- டிஜிட்டல் கண்காணிப்பு
- வெளிப்படைத் தன்மை

**இயந்திர உரிமையாளர்களுக்கு**

- கூடுதல் வருமானம்
- அதிக பயன்பாடு
- ஆன்லைன் முன்பதிவு வசதி

**விவசாயிகள் கவனிக்க வேண்டியவை**

**முன்பதிவுக்கு முன்**

- இயந்திர நிலை சரிபார்க்கவும்
- வாடகை தொகை உறுதி செய்யவும்
- நேரம் முன்கூட்டியே பதிவு செய்யவும்

**வேலை முடிந்தபின்**

- ரசீது சேமிக்கவும்
- சேவை தரம் மதிப்பிடவும்
- எதிர்கால மேம்பாடுகள்

**எதிர்காலத்தில்**

- AI அடிப்படையிலான இயந்திர பரிந்துரை
- GPS Tracking
- Drone Booking
- Voice Support in Tamil
- Online Subsidy Approval

போன்ற வசதிகள் சேர்க்கப்பட வாய்ப்பு உள்ளது.



கட்டுரை ஆசிரியர் : ***S.சுகுமார், உதவி பேராசிரியர், வேளாண்மை பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumarsubramani2002@gmail.com***

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**